## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَافَاغۡفِرۡلَنَا ذُنُوۡبَنَا وَكَفِّرۡعَنَّا سَيِّاٰتِنَا وَتَوَفَّنَامَعَ الۡاَبۡرَارِ

எங்கள் இறைவா! நீ எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக. எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக. (3:194)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 18

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

06 ரம்ஜான் 1441 ஹிஜ்ரி கமரி 30 ஷஹாதத் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

30 ஏப்ரல் 2020


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**விவசாயிக்கு களையை நீக்குவது அவசியமாக இருக்கின்றது. இல்லையென்றால் அதன் விளைவாக பிற பயிர்களுக்கு அது நல்லதாக இருக்காது. அவ்வாறே ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் தனக்குள் இருக்கும் களையை நீக்க வேண்டியது அவசியமாகும். இல்லையென்றால் பிற அழகிய பண்புகளையும் இழக்கும் அபாயம் உள்ளது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### ஆன்மாவின் பரிசுத்தமும் வெற்றியும்

இறை வழிகாட்டல் இதுவாகும்: கத் அஃப்லஹ மன் ஸக்காஹா. வகத் காப மன் தஸ்ஸாக (அஷ்-ம்ஸ்: 10-11) எவர் ஆன்மாவை பரிசுத்தப்படுத்திக்கொண்டாரோ அவர் இரட்சிப்பு பெறுவார். எவர் ஆன்மாவை கெடுத்துக்கொண்டாரோ அவர் அழிந்து விட்டார். ஃபலஹ் கீறுவதற்கு கூறப்படுகின்றது. ஃபலாஹின் இரகசியத்தை அறிவீர்களா? ஆன்மாவை பரிசுத்தப்படுத்துவதிலும் ஃபலாஹத் உள்ளது. முயற்சி மனித ஆன்மாவை அவனது தீமைகளில் இருந்தும் கடினங்களில் இருந்தும் தூய்மையாக்கி அவனில் சரியான ஈமானை விதைப்பதற்கு தகுதியானவனாக ஆக்கி விடுகின்றது. பிறகு அந்த ஈமானின் செடி துளிர்விட தயாராகி விடுகின்றது. துவக்க கட்டத்திலும் நிலையிலும் இறையச்சமுடையவருக்கு பெரும் பெரும் துன்பங்களையும் கஷ்டங்களையும் எதிர்கொள்ளவேண்டி வருகின்றது.

எனவேதான் ஃபலாஹ்வினால் விளக்கியுள்ளான். இரண்டாவது இடத்தில் கூறியுள்ளான்: குதிலல் கர்ராஸுனல்லதீனஹும் ஃபீ கம்ரதின் சாஹூன் (அத்தாரியாத்: 11-12) அல்லாஹ் நிராகரிப்பாளர்களின் நிலையைக் கூறுகின்றான், பொய்யர்களுக்கு அழிவுதான். அவர்களின் ஆன்மாக்கள் அழுத்தப்பட்டு கிடக்கின்றன. கம்ரா தலை உயர்த்த விடாத அழுத்தும் பொருளுக்கு கூறுப்படுகின்றது. வயலிலும் அழுத்தம் உள்ளது. அதனை களை என்கின்றனர். அல்லாஹ் கூறுகின்றான், பொய்யர்களுக்கு அழிவுதான். அவர்களின் ஆன்மாக்கள் அழுத்தப்பட்டு கிடக்கின்றன. முஃமின்களுக்கு இவ்வசனத்தில் ஒரு உதாரணத்தைக்கூறி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

அதாவது கம்ரா நீங்காதவரை உயர் தரத்தைக்கொண்ட அகப்பார்வை செயல்படாது. அது உலுல் அப்ஸார் (பார்வையுடையாராக) அழைக்கப்பட முடியாது. கதல் (கொல்லுதல்) ஏன் கூறியுள்ளான் என்றால் அது ரஹம் (கருணையின்) இடத்தில் உள்ளது. அதாவது அந்த செயலும் சுயமாகவே நடக்கின்றது. தன்னைத்தானே அழித்துக்கொண்டார். சில மனிதர்களிடம் பொய்மைக்கான தன்மை இருக்கின்றது. அவர்கள் அகப்பார்வையுடனும் தொலைநோக்குடனும் செயல்படுவதில்லை. மாறாக தவறான யூகம் மற்றும் கணிப்புடன் செயல்படுகின்றனர். அவர்கள் அதிலேயே தனது திறமை உள்ளதாக எண்ணுகின்றனர். எனது நோக்கம் என்னவென்றால் அக்லாக்கின் பகுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான முன்மாதிரியை முன்வைப்பதாகும். அன்னார் ஒரு முழுமைபெற்ற மனிதராகத் திகழ்ந்தார்கள். அன்னாருக்குப்பின் பலவாறாக அன்னாரின் அக்லாக்கிலிருந்து பங்குபெறப்பட்டுள்ளது. ஒருவர் ஒன்றை எடுத்துக் கொண்டார். அடுத்தவர் வேறொன்றை எடுத்துக் கொண்டார். ஒருவருக்கு வேறொன்றில் கம்ரா ஏற்பட்டு விட்டது.

விவசாயிக்கு களையை நீக்குவது அவசியமாக இருக்கின்றது. இல்லையென்றால் அதன் விளைவாக பிற பயிர்களுக்கு அது நல்லதாக இருக்காது. அவ்வாறே ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் தனக்குள் இருக்கும் களையை நீக்க வேண்டியது அவசியமாகும். இல்லையென்றால் பிற அழகிய பண்புகளையும் இழக்கும் அபாயம் உள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 116,117 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

### காதியான் தாருல் அமானில் தேசிய இஜ்திமாக்களுக்கான தேதி அறிவிப்பு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகுந்த பரிவுடன் இந்தியாவின் கிளை அமைப்புகளின் (மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, லஜ்னா இமாயில்லாஹ்) தேசிய இஜ்திமாக்களை 16,17,18 அக்டோபர் 2020 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள்.

கிளை அமைப்பின் உறுப்பினர்கள் காதியான் தாருல் அமானின் ஆன்மீகச் சூழலில் நடைபெறும் இந்த இஜ்திமாக்களில் பங்கு பெற இப்போதிருந்தே தயாராகுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம். இந்த இஜ்திமாக்கள் தர்பிய்யத்திற்கு மிகச் சிறந்த வழியாக இருக்கின்றது.


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ் துஆ என்னும் மாபெரும் ஆயுதத்தை நமக்கு வழங்கியுள்ளான். அதன் மூலம் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்**

**ஏதாவதொரு வடிவில் ஜமாஅத்துடன் உரையாடுவதை நான் உகந்ததாக கருதினேன். மேலும் அதற்காக அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு ஒரு தூதுச் செய்தியின் வடிவில் உங்களுடன் பேசுகின்ற வழிமுறையை நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்**

**ஜமாஅத் உறுப்பினர்கள் தத்தமது வீடுகளிலேயே ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் இணைந்து ஜுமுஆ தொழுது கொள்ள வேண்டும்**

**மல்ஃபூஸாத்திலிருந்தோ அல்லது ஜமாஅத் புத்தகங்களிலிருந்தோ அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இதர நூல்களிலிருந்தோ அல்லது அல்ஃபஸல் பத்திரிகையிலிருந்தோ அல்லது அல் ஹகம் பத்திரிகையிலிருந்தோ அல்லது வேறு ஏதாவதொரு பத்திரிகையிலிருந்தோ மேற்கோள்களை படித்து குத்பா கொடுத்துக் கொள்ளலாம். வீட்டின் உறுப்பினர்களில் பருவமடைந்த இளைஞரோ அல்லது ஆணோ ஜுமுஆ நடத்தலாம். தொழுகைகளையும் நடத்தலாம்**

**வீடுகளில் மக்கள் ஜுமுஆக்களை நடத்துகின்றபோது அவர்கள் குத்பாவிற்காக ஆயத்தம் செய்வார்கள். அந்நிலையில் புத்தகங்களை படிப்பார்கள். அதன் மூலம் அவர்களின் அறிவு வளரும். மேலும் இவ்வாறு அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின் காரணமாக வீட்டில் அமர்ந்திருப்பதும் மார்க்கம் மற்றும் ஆன்மீகத்தின் பயன்களுக்கு காரணிகளாக அமைந்து விடும். அறிவார்ந்த நன்மைகளுக்கும் காரணியாக அமைந்து விடும்**

**நாமும் நமது குடும்ப வாழ்க்கையின் நிலைமைகளை சீர் செய்தவாறு, குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்கியவாறு இந்த நேரத்தை கழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்**

**MTA வில் மிக நல்ல நிகழ்ச்சிகள் வருகின்றன. அதற்கென்று சில நேரத்தை ஒதுக்கி அந்த நிகழ்ச்சிகளை ஒன்றுசேர்ந்து பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்**

**அதுமட்டுமல்லாமல் அரசாங்கம் பொது மக்களின் நன்மைக்காக நான் ஏற்கெனவே கூறி இருக்கின்றேன். உங்களது ஆரோக்கியத்தை நிலைநாட்டுவதற்காக என்ன வழிகாட்டல்களை வழங்கியுள்ளதோ மேலும் என்னென்ன சட்டங்களை விதித்துள்ளதோ அதனை முழுமையாக நீங்கள் பின்பற்றுங்கள்**

**எல்லாவற்றையும் விட அதிகமாக நான் கடந்த குத்பாக்களில் ஏற்கனவே கூறியிருப்பது போன்று, துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். துஆக்களின் மூலமாக அல்லாஹ்வின் அருள்களை நம்மால் ஈர்க்க முடியும். மேலும் நமது ஆன்மீக மற்றும் பௌதீக நிலைகளை ஆரோக்கியமானதாக ஆக்கிக் கொள்ள முடியும்**

**வீட்டில் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கத்தை உருவாக்குங்கள். அதன் மூலம், தொழுகைகளை தொழுவதும் அவசியமாகும். ஜமாஅத்தாக தொழுவதும் அவசியமாகும் என்ற அறிவு பிள்ளைகளுக்கு ஏற்படும்**

**அல்லாஹ் இந்த தொற்று நோயிலிருந்து உலகை விரைவில் தூய்மைப்படுத்துவானாக. மேலும் முழு உலகையும் மனிதத்துவத்தின் தேட்டத்தை முழுமை செய்யக் கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் அனைவரையும் இறைவனை அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள இஸ்லாமாபாதில் 27 மார்ச் 2020** அன்று நிகழ்த்திய சிறப்பு சொற்பொழிவு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்றைய நாட்களில் வைரஸ் தொற்று நோய் பரவியிருப்பதன் காரணமாக அரசாங்கம் கட்டுப்பாடுகளை வதித்துள்ளது. ஏராளமான அரசாங்கங்களும், இங்குள்ள பிரித்தானிய அரசாங்கமும், பள்ளிவாசலில் தொழுகை நடத்தக் கூடாது என்று கூறியுள்ளன. அல்லது ஒருவேளை தொழுகை நடைபெற்றாலும் சில உறுப்பினர்களைத் தவிர்த்து அதிகமானோர் ஒன்றுகூடக்கூடாது என்று மேலும் அவர்கள் நெருங்கிய மக்களாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளன. இன்னும் சட்டம் நமக்கு தெளிவாக தெரியவில்லை. ஒருவர் ஒரு விளக்கம் தருகின்றார்; வேறொருவர் மற்றொரு விளக்கம் தருகின்றார். சிலர் கூறுவது என்னவென்றால், உறவினர்களாக இருந்தால்தான் ஒன்றுகூட முடியும் என்று கூறுகின்றார். வேறொருவரோ நண்பர்கள் அல்லது உடன் இருப்பவர்கள் கலந்து கொள்ள முடியும் என்று கூறுகின்றார். எவ்வாறிருப்பினும் இந்த சூழல்கள் முறையாக தெளிவு பெறாத வரை ஜுமுஆ நடத்த முடியாது. ஏனென்றால் ஜுமுஆ தொடர்பான விஷயங்களில் சில விளக்கம் பெற வேண்டிய விஷயங்கள் உள்ளன.

எனவே அலுவலகத்திலிருந்து இருந்து கொண்ட குத்பாவிற்கு பகரமாக ஒரு தூதுச் செய்தியின் வடிவில் உங்களுடன் பேச வேண்டும் மற்றும் உரையாட வேண்டும் என்று நான் ஆலோசனைக்குப் பிறகு இந்த முடிவை எடுத்துள்ளேன்.

ஜுமுஆ முறையாக தொழப்பட வேண்டாம் என்றும் முடிவெடுத்துள்ளேன்.

ஜுமுஆ நாளன்று காலத்தின் கலீஃபாவின் குத்பாவை MTA வில் கேட்பதற்கு உங்கள் அனைவருக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. இன்று நான் ஜமாஅத்திடம் பேசவில்லை என்றால் மக்களுக்கு சில சமயம் நிராசை ஏற்பட்டு விடும். மேலும் அதுமட்டுமல்லாமல் பல

தரப்பட்ட கற்பனைகளும் ஆரம்பமாகி விடும். எனவே ஏதாவதொரு வடிவில் ஜமாஅத்துடன் உரையாடுவதை நான் உகந்ததாக கருதினேன். மேலும் அதற்காக அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு ஒரு தூதுச் செய்தியின் வடிவில் உங்களுடன் பேசுகின்ற வழிமுறையை நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன்.

எவ்வாறிருப்பினும் நான் கூறியதுபோன்று இன்று நாம் ஜுமுஆ தொழ மாட்டோம். எதிர்வரும் நாட்களில் என்ன வழிமுறை மேற்கொள்ளப்படும் என்பது உங்களுக்கு கூறப்படும். இன்ஷா அல்லாஹ். நீண்ட காலம் நம்மால் ஜுமுஆவை கைவிடவும் முடியாது. நான் கூறியதுபோன்று ஜமாஅத்துடன் எனது தொடர்பு அவசியமாகும். இன்றைய நாட்களில் நிலவும் சூழல்களில் குறிப்பாக அது மிகவும் அவசியமாகி விட்டது. எனவே வக்கீல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மக்களுடன் ஆலோசனை செய்த பிறகு இன்ஷா அல்லாஹ் அதற்குரிய தீர்வை நாம் காண்போம்.

ஜமாஅத் உறுப்பினர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், எங்கு அரசாங்கம் இந்த நோயின் காரணமாக பள்ளிவாசலுக்கு வருவதற்கு தடை செய்துள்ளதோ அதை பின்பற்ற வேண்டும். அல்லது ஒருவேளை தடை செய்யவில்லை என்றாலும் உதாரணமாக, இங்கு யூ.கேவில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதாவது தனிப்பட்ட முறையில் பள்ளிவாசலுக்கு வந்து தொழுது கொள்ளலாம். அல்லது சில குடும்ப உறுப்பினர்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுது கொள்ளலாம். ஆயினும் இவ்வளவு தூரத்திலிருந்து வர வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. மேலும் தங்களுக்குள் நெருங்கிய தொடர்பு இருக்கக்கூடாது என்றும் அரசாங்கம் கூறியுள்ளது. ஆனால் அனைவரும் ஒன்றுகூடி ஜமாஅத்தான தொழுகையை நடத்த முடியாது.

எனவே இதுபோன்ற நிலைகளில் ஜமாஅத் உறுப்பினர்கள் தத்தமது வீடுகளிலேயே ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் இணைந்து ஜுமுஆ தொழுது கொள்ள வேண்டும்.

மல்ஃபூஸாத்திலிருந்தோ அல்லது ஜமாஅத் புத்தகங்களிலிருந்தோ அல்லது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இதர நூல்களிலிருந்தோ அல்லது அல்ஃபஸல் பத்திரிகையிலிருந்தோ அல்லது அல் ஹகம் பத்திரிகையிலிருந்தோ அல்லது வேறு ஏதாவதொரு பத்திரிகையிலிருந்தோ மேற்கோள்களை படித்து குத்பா கொடுத்துக் கொள்ளலாம். வீட்டின் உறுப்பினர்களில் பருவமடைந்த இளைஞரோ அல்லது ஆணோ ஜுமுஆ நடத்தலாம். தொழுகைகளையும் நடத்தலாம்.

எவ்வாறிருப்பினும் ஜுமுஆவை நீண்ட காலம் கைவிட முடியாது. வீடுகளில் மக்கள் ஜுமுஆக்களை நடத்துகின்றபோது அவர்கள் குத்பாவிற்காக ஆயத்தம் செய்வார்கள். அந்நிலையில் புத்தகங்களை படிப்பார்கள். அதன் மூலம் அவர்களின் அறிவு வளரும். மேலும் இவ்வாறு அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின் காரணமாக வீட்டில் அமர்ந்திருப்பதும் மார்க்கம் மற்றும் ஆன்மீகத்தின் பயன்களுக்கு காரணிகளாக அமைந்து விடும். அறிவார்ந்த நன்மைகளுக்கும் காரணியாக அமைந்து விடும். இன்னும் சொல்வதென்றால், அல் ஹகம் பத்திரிகையில் இன்றைய நாட்களில் மக்களின் கருத்துக்களை கேட்கின்ற தொடரை ஆரம்பித்துள்ளார்கள். அதில் இந்த கட்டுப்பாடுகளின் காரணமாக வீட்டில் அமர்ந்து நேரத்தை எவ்வாறு கழித்தீர்கள்? என்று கேட்கப்படுகிறது.

அதில் பெரும்பாலான மக்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்கள் மற்றும் ஜமாஅத் புத்தகங்களைப் படித்து நாங்கள் எங்களது அறிவை வளர்த்து வருகின்றோம் என்று கூறுகின்றனர்.

இன்றைய நாட்களில் உலகில் பல்வேறு தரப்பட்ட இணைய தளத்தில் தத்தமது கருத்துக்களை உலகியல்வாதிகள் கூறி வருகின்றனர். அவர்கள் கூறுவது என்னவென்றால், இந்த கட்டுப்பாடுகளின் காரணமாக எங்களது குடும்ப வாழ்க்கையின் நிலைமைகளை சரி செய்வதற்கு எங்களுக்கு பாக்கியம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. மேலும் எங்களது குடும்ப வாழ்க்கை எங்களுக்கு திரும்ப கிடைத்து விட்டது என்றும் கூறுகின்றனர்.

எனவே நாமும் நமது குடும்ப வாழ்க்கையின் நிலைமைகளை சீர் செய்தவாறு, குழந்தைகளுக்கு தர்பிய்யத் வழங்கியவாறு இந்த நேரத்தை கழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

MTA வில் மிக நல்ல நிகழ்ச்சிகள் வருகின்றன. அதற்கென்று சில நேரத்தை ஒதுக்கி அந்த நிகழ்ச்சிகளை ஒன்றுசேர்ந்து பார்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் அரசாங்கம் பொது மக்களின் நன்மைக்காக நான் ஏற்கெனவே கூறி இருக்கின்றேன். உங்களது ஆரோக்கியத்தை நிலைநாட்டுவதற்காக என்ன வழிகாட்டல்களை வழங்கியுள்ளதோ மேலும் என்னென்ன சட்டங்களை விதித்துள்ளதோ அதனை முழுமையாக நீங்கள் பின்பற்றுங்கள்.

எல்லாவற்றையும் விட அதிகமாக நான் கடந்த குத்பாக்களில் ஏற்கனவே கூறியிருப்பது போன்று, துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். துஆக்களின் மூலமாக அல்லாஹ்வின் அருள்களை நம்மால் ஈர்க்க முடியும். மேலும் நமது ஆன்மீக மற்றும் பௌதீக நிலைகளை ஆரோக்கியமானதாக ஆக்கிக் கொள்ள முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் அவ்வாறு செய்யும்படியே நமக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

எல்லாவற்றையும் விட மிக அவசியமான விஷயம் என்னவென்றால், இறைவனிடத்தில் பாவமன்னிப்பு வேண்டுவதாகும். மேலும் உள்ளத்தை தூய்மைப்படுத்த வேண்டும். மேலும் நற்செயல்களில் மும்முரமாகி விட வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தற்போதைய சூழலுக்குரிய வழிமுறையாக நமக்கு வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் துஆ என்னும் மாபெரும் ஆயுதத்தை நமக்கு வழங்கியுள்ளான். அதன் மூலம் அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஜுமுஆ தொழாமல் இருப்பது தொடர்பான கேள்வியைப் பொறுத்தவரை, சில சூழல்களில் ஜமாஅத்தான தொழுகை மற்றும் ஜுமுஆவை நிறைவேற்றுவதிலிருந்து விலக்கு தொடர்பாக சில நபிமொழிகளில் நமக்கு விளக்கம் உள்ளது. உதாரணமாக, புகாரியில் வருகின்ற ஒரு ஹதீஸ் இவ்வாறு உள்ளது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள், மழை நாளில் தனது பாங்கு கொடுக்கின்ற நபரிடம் கூறினார்கள்: நீங்கள் அஷ்ஹது

## திருக்குர்ஆனிலிருந்து...

நாம் இறக்கிய இது ஓர் அருள் நிறைந்த வேதமாகும். எனவே நீங்கள் இதனைப் பின்பற்றுங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்பட இறையச்சத்தைக் கைக் கொள்ளுங்கள். (6:156)

Faizal Hameed Ilahi, Tittacherry

அல்லாயிலாஹா இல்லல்லாஹ் மற்றும் அஷ்ஹது அன்ன முஹம்மத்துர் ரஸூலுல்லாஹ் என்று கூறிய பிறகு ஹய்யா அலஸ் ஸலாத் என்று கூற வேண்டாம். மாறாக, சல்லூ ஃபீ புயூதிகும் அதாவது உங்களது வீடுகளிலேயே தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்ற சொற்களை கூற வேண்டும் என்று கூறினார்கள். ஆக ஒரு வகையில் மக்களுக்கு இது ஆச்சரியமானதாக இருந்தது. மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்வாறே செய்தார்கள். அன்னார் என்னை விட சிறந்தவராக இருந்தார்கள். ஜுமுஆ தொழுவது அவசியம்தான் என்றாலும் நீங்கள் சகதியில் நடந்து வந்து துன்பத்திற்கு ஆளாகுவதை நான் விரும்பவில்லை.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜுமுஆ... ஹதீஸ் எண் 901)

இந்த ஹதீஸ் முஸ்லிமிலும் சில சொற்களில் மாற்றங்களுடன் இவ்வாறு வந்துள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நீங்கள் அஷ்ஹது அல்லாயிலாஹா இல்லல்லாஹ் மற்றும் அஷ்ஹது அன்ன முஹம்மத்துர் ரஸூலுல்லாஹ் என்று கூறிய பிறகு ஹய்யா அலஸ் ஸலாத் என்று கூற வேண்டாம். மாறாக, சல்லூ ஃபீ புயூதிகும் அதாவது உங்களது வீடுகளிலேயே தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் என்று பாங்கு கூறக் கூடியவரிடம் கூறினார்கள். மக்களுக்கு அது புதிதாக இருந்தது. அப்போது ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள், நீங்கள் ஏன் ஆச்சரியப்படுகின்றீர்கள்? என்னை விட சிறந்தவராக இருந்த நபரே இந்த பணியை செய்திருந்தார்கள். ஜுமுஆ தொழுவது அவசியம் என்றாலும் உங்களை இந்த நிலையில் விட்டை விட்டு வெளியேற்றுவதையும், நீங்கள் சகதியில் நடப்பதையும் நான் விரும்பவில்லை என்றும் அன்னார் கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் சலாத்... ஹதீஸ் எண் 699)

அல்லாமலா இமாம் நவ்தி சாஹிப் இந்த ஹதீஸின் விளக்கவுரையாக எழுதுகின்றார்கள்: அதாவது இந்த ஹதீஸின் அடிப்படையில் மழை போன்ற நிர்பந்தத்தின் காரணமாக ஜுமுஆவை கைவிடுவதற்கு ஆதாரம் உள்ளது. நமது வழிமுறையும் இதுவாகவே உள்ளது.

அவர்கள் எழுதுகின்றார்கள்: மற்ற மார்க்க சட்ட வல்லுநர்களின் கருத்தும் இதுதான். ஆனால் இமாம் மாலிக் அவர்கள் இதற்கு நேர் எதிரான கருத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். வல்லாஹு அஃலமு பிஸ்ஸவாப்.

(அல்மின்ஹாஜ் ஷரஹ் சஹீஹ் முஸ்லிம் தொகுதி 5 பக்கம் 208 கிதாபுஸ் சலாத்... ஹதீஸ் எண் 699)

இதேபோன்று மார்க்க சட்ட அறிஞர்கள் ஜுமுஆ மற்றும் ஜமாஅத்தாக தொழுவதிலிருந்து விலகி இருப்பதற்குரிய காரணங்களில் எந்த நோயினால் பள்ளிவாசலுக்கு வருவது கடினமோ அதனையும் ஒரு காரணமாக இணைத்துள்ளார்கள். அதற்கு ஆதாரமாக அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலை அவர்கள் முன் வைக்கின்றார்கள். அதாவது அல்லாஹ் மார்க்கத்தில் உங்களுக்கு எந்த கடினத்தையும் ஏற்படுத்தவில்லை என்று கூறியுள்ள வழிகாட்டலை முன் வைக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது அன்னார் பள்ளிவாசலுக்கு செல்வதிலிருந்து விலகிக் கொண்டார்கள். மேலும் மக்களுக்கு இமாமம் செய்யுமாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

இந்த ஹதீஸ் புகாரியிலும் உள்ளது. முஸ்லிமிலும் உள்ளது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஆஸான்... ஹதீஸ் எண் 680–681 & சஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் சலாத்... ஹதீஸ் எண் 419)

அதேபோன்று ஒரு நோய் ஏற்படும் என்று அச்சப்படும் நபரும் விலக்கு பெற்றவர் ஆவார். அதற்குரிய ஆதாரம் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்களுடைய அறிவிப்பாகும். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விலகி இருப்பதன் தஃப்ஸீராக அச்சம் மற்றும் நோயை குறிப்பிட்டுள்ளார்கள். இந்த ஹதீஸ் சுனன் அபீ தாவூதில் உள்ளது.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சலாத்... ஹதீஸ் எண் 551)

எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள இந்த நோயில் நோய் பரவுவதற்கான அபாயம் உள்ளது. எனவே அரசாங்கமும் அதற்காக சில சட்டங்களை உருவாக்கி உள்ளது. நாட்டின் சட்டங்களுக்கேற்ப நடப்பதும் அவசியமாகும். இதுபோன்ற நிலைகளில் ஓரிடத்தில் ஒன்று கூடுவதும், ஜமாஅத்தாக தொழுவதும் அல்லது ஜுமுஆ தொழுவதும் கடினமாகும். ஆனால் நான் கூறியதுபோன்று வீட்டில் ஜமாஅத்தாக தொழுகின்ற பழக்கத்தை உருவாக்குங்கள். அதன் மூலம், தொழுகைகளை தொழுவதும் அவசியமாகும். ஜமாஅத்தாக தொழுவதும் அவசியமாகும் என்ற அறிவு பிள்ளைகளுக்கு ஏற்படும்.

இன்றைய நாட்களின் சூழலின் காரணமாக நம்மால் பள்ளிவாசலுக்கு செல்ல முடியாது. ஆனால் அந்த கடமையை நமது வீட்டில் நிறைவேற்றுவதும் அதை முழுமை செய்வதும் அவசியமாகும். அதன் பக்கம் சிறப்பான கவனம் செலுத்துங்கள். சில முறை இதுபோன்ற சூழல்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் பயணங்களின்போது வந்துள்ளன. அந்நிலைகளில் அன்னார் ஜுமுஆ தொழுததில்லை.

(அல்ஃபஸல் 24 ஜனவரி 1942 பக்கம் 1 தொகுதி 20 இதழ் 21)

எவ்வாறிருப்பினும் ஏராளமான அறிவிப்புகள் உள்ளன. அதிலிருந்து தொற்று நோய்களின்போது ஒன்று கூடுவதும், அல்லது நோய்வாய்ப்பட்ட நிலைகளில் ஒருவர் மற்றவரை சந்திப்பதும் உகந்ததல்ல என்பது தெரிய வருகின்றது. எனவே அந்நிலைகளில் தனியாக இருக்க வேண்டும். மேலும் தனியாக வைக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியதுபோன்று நாம் நிரந்தரமாக இதை கைவிடப் போவதில்லை. மேலும் அதற்கான மாற்று ஏற்பாட்டையும் நாம் செய்து கொண்டிருக்கின்றோம். வீடுகளில் ஜுமுஆ தொழுது கொள்ளுங்கள். நானும் ஓர் ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சி செய்வேன்.

அல்லாஹ் அருள் செய்வதற்காக துஆ செய்யுங்கள். இப்போது இது அவசியமாகும். நான் ஏற்கெனவே கூறியதுபோன்று அல்லாஹ் இந்த தொற்று நோயிலிருந்து உலகை விரைவில் தூய்மைப்படுத்துவானாக. மேலும் முழு உலகையும் மனிதத்துவத்தின் தேட்டத்தை முழுமை செய்யக் கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் அனைவரையும் இறைவனை அடையாளங்கண்டு கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக. அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரக்காத்துஹூ

## திருக்குர்ஆனிலிருந்து...

தங்கள் மார்க்கத்தைப் பிளந்து பல்வேறு பிரிவினர்களாகிவிட்டவர்களுடன் உமக்கு எத்தொடர்புமில்லை. நிச்சயமாக அவர்களைப் பற்றி முடிவு எடுப்பது அல்லாஹ்வின் பொறுப்பு. பின்னர் அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றி அவனே அவர்களுக்கு அறிவித்து விடுவான். (6:160)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

### சந்ததிகளுக்காக துஆ செய்யுங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சந்ததிகள் பிறக்க வேண்டும் என்று மக்கள் பெரிதும் ஆசைப்படுகின்றனர். மேலும் சந்ததிகள் அவர்களுக்கு பிறக்கவும் செய்கின்றனர். ஆனால் சந்ததிகளுக்கு நல்ல தர்பிய்யத் வழங்கி, அவர்களை சிறந்தவர்களாகவும், நல்ல விதமாக நடந்து கொள்பவர்களாகவும் மேலும் இறைவனுக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக ஆக்குவதற்கு முயற்சி செய்வதற்காக கவலைப்படுவதையும் ஒரு போதும் பார்க்க முடிவதில்லை. அவர்களுக்காக ஒருபோதும் துஆவும் செய்வதில்லை. அவர்களுக்கு படிப்படியாக வழங்கப்படும் தர்பிய்யத் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதில்லை.

எனது நிலை எவ்வாறு இருக்கிறது என்றால் எனது நண்பர்களுக்காகவும், சந்ததிகளுக்காகவும், மனைவிக்காகவும் துஆ செய்யாத எனது எந்த தொழுகையும் இல்லை. பல பெற்றோர்களும் தமது சந்ததிகளுக்கு தீய ஒழுக்கத்தை கற்றுத் தருகின்றனர். ஆரம்பத்தில் அவர்கள் தீய செயலை செய்வதற்கு கற்றுக் கொள்ளும் போது அது குறித்து அவர்களுக்கு பெற்றோர்கள் எச்சரிப்பதில்லை.

இதன் காரணமாக நாள் செல்ல செல்ல அவர்கள் தீய செயலை செய்வதில் தைரியமிக்கவர்களாகவும், தான்தோன்றித் தனமாக செயல்படுபவர்களாகவும் ஆகிவிடுகின்றனர். மக்கள் சந்ததிகள் பிறக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அந்த சந்ததிகள் மார்க்கத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, உலகில் அவர்களுக்கு ஒரு வாரிசு இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு ஆசைப்படுகின்றனர்.

ஆனால் சந்ததிகள் பிறக்கும் போது அவர்களது தர்பிய்யத் தொடர்பாக கவலைப்படுவதில்லை. அவர்களது கொள்கையையும் சீர்திருத்துவதில்லை. அவர்களது நல்லொழுக்க நிலைமையையும் சரி செய்வதில்லை. நெருக்கமான உறவுகளை புரிந்து கொள்ளாதவர்களது ஈமான் சரியாக இருக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதிலேயே அவர்களிடம் குறை இருக்கும் போது வேறு என்ன நன்மைகளை நாம் அவர்களிடம் எதிர்பார்க்க முடியும் ?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 560)

### நோன்பு வைத்தவாறு பயணம் செய்யலாமா ?

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு நபர் நோன்பு மாதத்தில் பயணத்தின் போது நோன்பு நோற்பது மற்றும் தொழுவது தொடர்பாக வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ரமலானில் பயணத்தின் போது நோன்பு வைக்க வேண்டாம் என்று கூறினார்கள். அதற்கு அந்த நபர், நபிகள் நாயகமே ! எனக்கு நோன்பு வைப்பதற்காக ஆற்றல் இருக்கின்றது என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவரிடம், நீ அதிக ஆற்றல் மிக்கவரா ? அல்லது அல்லாஹ்வா ? நிச்சயமாக அல்லாஹ் என்னுடைய உம்மத்தைச் சார்ந்த நோயாளிகளுக்கும், பயணிகளுக்கும் ரமலான் மாதத்தில் பயணத்தின் நிலையில் நோன்பு வைக்காமல் இருப்பதை ஸதகாவாக ஆக்கி விடுப்பு வழங்கி இருக்கின்றான்.என்று கூறினார்கள்.

(அல் முஸ்னிஃபுல் ஹாபிஸுல் கபீர் அபி அப்கர் அப்துர் ரஸாக் பின் ஹமாமுஸ் ஸன்ஆனில் ஜஸ்உஸ்ஸானி பக்கம் 565 பாபுஸ் ஸயாம் ஃபிஸ் ஸஃபர்)

### சதகத்துல் ஃபித்ர் -ன் விகிதாச்சாரம்

அருளுக்குரிய ரமலான் ஏப்ரல் மாதத்தின் இறுதியில் ஆரம்பமாகிறது. அல்ஹம்துலில்லாஹ்.

இஸ்லாத்தில் ஒரு ஸாஹ் நெல் (அதாவது 2 கிலோ 750 கிராம்) என்ற விகிதாச்சாரத்திற்கேற்ப சதகத்துல் ஃபித்ர் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுமையான விகிதாச்சாரப்படி சதகத்துல் ஃபித்ரை அருளுக்குரிய ரமலானின் முதல் பத்திலோ அல்லது இரண்டாம் பத்திலோ செலுத்துவதற்கு ஜமாஅத் சகோதரர்கள் முயற்சி செய்யவும். இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கோதுமை, அரிசி ஆகியவற்றின் விகிதாச்சாரம் வேறுபடுவதால் உள்ளூர் விலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சாரத்தின் படி (2 கிலோ 750 கிராம் நெல்) சதகத்துல் ஃபித்ர் தொகையை செலுத்தவும்.

பஞ்சாப் மாநிலத்தில் இவ்வருடம் ஸதக்கத்துல் ஃபித்ரின் விகிதாச்சாரம் 55 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் ஜமாஅத்தில் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்கள் இருப்பார்களாயின் சதகத்துல் ஃபித்ரின் ஒட்டுமொத்த தொகையில் 90 சதவிகிதம் தொகையை உள்ளூர் செயற்குழுவின் ஆலோசனை மற்றும் முடிவுக்குப் பிறகு விநியோகிக்கலாம். மீதமுள்ள தொகையை தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும். எந்த ஜமாஅத்தில் ஏழைகளும், தேவையுடையவர்களும் இல்லையோ அந்நிலையில் அந்த ஜமாஅத்தில் வசூல் செய்யப்பட்ட தொகையை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஜமாஅத்தின் வங்கிக் கணக்கிற்கு அனுப்ப வேண்டும்.

சதகத்துல் ஃபித்ர் தொகையை பள்ளிவாசலின் அத்தியாவசியத் தேவைக்காக செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது என்பதை நினைவில் கொள்ளவும்.

### ஈத் ஃபண்ட்

இந்த சந்தா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இருக்கின்றது. இதன் நோக்கம், மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் மனிதன் தனக்காக ஆடைகள், உணவு மற்றும் விருந்து உபசரிப்பிற்காக பல்வேறு வகையான செலவுகளை செய்கின்றான். மற்றவர்களுக்கு அன்பளிப்பும் கொடுக்கின்றான்.

அதேபோன்று அந்த மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் அவனுக்கு மார்க்கத்தின் குறிக்கோளும் நினைவில் இருக்க வேண்டும். அஹ்மதி உறுப்பினர்கள் பைஅத் உடன்படிக்கையில், உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்று உடன்படிக்கை செய்துள்ளனர். எனவே ஒவ்வொரு அஹ்மதியிடமும் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால், இந்த மகிழ்ச்சிகரமான பண்டிகையின்போது மார்க்கத்தின் குறிக்கோளையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் சம்பாதிக்கக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியும் இதற்காக ஒரு ரூபாய் ஈத் ஃபண்டாக கொடுத்து வந்துள்ளார்கள். தற்காலத்தில் ஒரு ரூபாய்க்கு எந்த மதிப்பும் இல்லை. எனவே உங்களது சக்திக்குட்பட்டவாறு நீங்கள் வழங்குங்கள்.

ஆலோசனை என்னவென்றால், ஈத் நாளன்று எவ்வளவு தொகை செலவு செய்யப்படுகிறதோ அதில் பாதி தொகையை இதற்காக செலுத்தவும். ஈத் பண்ட் தொகையை பெருநாளைக்கு முன்பாக எப்போது வேண்டுமானாலும் செலுத்தலாம்.

இது தலைமையகத்திற்குரிய சந்தாவாகும். முழுத் தொகையையும் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா வங்கிக் கணக்கில் செலுத்துவது அவசியமாகும். இந்த தொகையிலிருந்து உள்ளூர் அளவில் செலவு செய்வதற்கு அனுமதி கிடையாது.

– நாஸிர் பைத்துல் மால் ஆமத், காதியான்

### திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையைச் செய்பவன் அதன் பத்து மடங்கு (நன்மையைப்) பெறுவான். ஆனால் தீமையைச் செய்பவன் அதன் அளவிற்கே தண்டனை பெறுவான். அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. (6:161)

A.Basheer Ahmad, Melapalayam

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் இந்த அனைத்து விஷயத்தையும் சுருக்கமாக கூறுவதன் நோக்கம் என்னவென்றால் நான் கூற இருக்கின்ற விஷயத்தை கவனமாக கேளுங்கள். மேலும் அதன்படி செயல்பட முயற்சி செய்யுங்கள். அது அல்லாமல் இங்கு வந்தோம்; சொற்பொழிவைக் கேட்டோம்; வீட்டிற்குச் சென்று விட்டோம்; அதே காலைப்பொழுதைப் போன்றும், மாலைப்பொழுதைப் போன்று நாட்களை கழித்தோம்; மார்க்கமும் அதனைப் பற்றிய கவலையும் இல்லாமல் இருந்தோம் என்று இருக்கக்கூடாது.

ஆக பழைய விஷயங்கள்தான் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறப்படுகிறது என்று கூறக் கூடியவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது திருக்குர்ஆன், நபிமொழி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள், மேற்கோள்கள் மற்றும் நபியின் அழகிய முன்மாதிரி மற்றும் போதனைகள் ஆகியவை ஒருபோதும் பழைய விஷயங்களாக ஆகி விடுவதில்லை. மாறாக, அது ஒவ்வொரு நொடியும் புதிய கோணத்தில் மார்க்க ஞானத்தை வழங்கக் கூடியதாகவும், அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற்றுக் தரக்கூடியதாகவும் இருக்கின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இங்கு இதனையும் நான் தெளிவுபடுத்திக் கொள்கின்றேன். அதாவது இந்த தீமை மற்றும் பலவீனம் பெண்களிடம் மட்டும்தான் இருக்கின்றது. எனவே நான் பெண்களிடம் இதைப் பற்றி கூறுகின்றேன் என்று கருத வேண்டாம். இந்த பலவீனம் பெண்களை விட ஆண்களிடம் அதிகமாக இருக்கலாம். மேலும் பெரும்பான்மையான இடங்களில் இந்த தீமை மற்றும் பலவீனத்தை நம்மால் பார்க்க முடிகிறது.

எனவே ஆண்களும் இவ்விஷயத்தைக் கேட்டு தம்மை ஆய்வு செய்ய வேண்டும். (ஆண்கள்) வீட்டிற்குச் சென்று இந்த தீமை உங்களிடம் தான் இருக்கின்றது என்று பெண்களிடம் கூறக் கூடாது. மாறாக, இருவருக்கும் எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கின்றது. எனவே நான் இதனை எடுத்துக் கூறுகின்றேன். ஆக ஆண்கள் தம்மை ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும்.

பொதுவாக நான் ஆண்களுக்கு எந்த விஷயத்தை எடுத்துக் கூறுகின்றேனோ அதன்படி ஆண்களில் பெரும்பான்மையினர் செயல்பட ஆரம்பித்து விட்டால் பிறகு பெண்கள் இவர்களின் முன்மாதிரியைப் பார்த்து தம்மைத்தாமே சீர்திருத்திக் கொள்வார்கள். மேலும் அவர்களிடம் மாற்றம் ஏற்பட்டு விடும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இப்போது இங்கு இருக்கின்றவர்களில் பெரும்பான்மையினர் நிலைமைகளின் காரணமாக மேலும் குறிப்பாக மார்க்க நிலைமைகளின் காரணமாக பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்துள்ளனர். பொருளாதார நிலைமையின் காரணமாக ஹிஜ்ரத் செய்யப்பட்டிருந்தாலும் அது நன்கு படிப்பறிவு பெற்ற ஒரு சில மக்களே ஆவர். ஆனால் இவர்களில் பெரும்பான்மையினர் இங்குள்ள அரசாங்கத்திடம், பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு மார்க்க சுதந்திரம் இல்லை என்பதையே ஹிஜ்ரத் செய்ததற்கான நோக்கமாக கூறியுள்ளனர்.

சில இஸ்லாமிய எதிர்ப்பாளர்கள் கூச்சலிட்ட பிறகும் இங்குள்ள அரசாங்கமும் உங்களுக்கு அஸைலம் (அடைக்கலம்) கொடுத்துள்ளது. மேலும் சுதந்திரமாக உங்களது மார்க்கத்தை எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பையும் தந்துள்ளது.

எனவே இந்த அடிப்படையில் நாம் இரண்டு விஷயங்களை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று, இந்த நாட்டின் அரசாங்கத்திற்கு நாம் நன்றி தெரிவிப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் உங்களது மார்க்க உரிமைகளை நிலைநாட்டியவாறு மார்க்க சுதந்திரத்தை உங்களுக்கு வழங்கியுள்ளார்கள். இங்கு நாம் சுதந்திரமாக தொழ முடியும். மேலும் பிரச்சாரமும் செய்ய முடியும். எனவே இந்த நாட்டின் நலனுக்காக நன்றி தெரிவிக்கும் வகையில், எவ்வாறு நாம் இந்த நாட்டிற்கு நன்மை செய்ய முடியும் என்று எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

நாம் இந்த நாட்டிற்கு செய்யும் மிகப்பெரிய நன்மை என்னவென்றால், இவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துக் கூற வேண்டும். மேலும் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

பெண்களுக்கு பிரச்சாரம் செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை என்பது தவறான எண்ணமாகும். அவர்களுக்கு கிடைக்கின்றது. அதிகமாக கிடைக்கின்றது. மேலும் இதற்காக நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டும்.

ஆக இவர்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எடுத்துக் கூறுவதும் நன்றி தெரிவிப்பதன் ஒரு வழிமுறையாகும். இதன் மூலம் முஸ்லிம்களின் தவறான செயல்களின் காரணமாக ஏற்படுகின்ற எதிர்ப்புகள் மற்றும் அதன் விளைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரை எள்ளிநகையாடுவதை நம்மால் அகற்ற முடியும்.

இரண்டாவதாக, மார்க்கத்தின் காரணமாக நமக்கு இங்கு இருப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே நாம் நமது மார்க்க நல்லொழுக்கத்தையும், ஆன்மீக நிலைமைகளையும் இஸ்லாத்தின் போதனைகளுக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் வைத்துள்ள எதிர்பார்ப்புகளுக்கேற்ப முழுமையாக செயல்பட முயற்சி செய்ய வேண்டும். அன்னார் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? இந்த விஷயத்தை ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தனக்கு முன்னால் வைக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் ஏற்றுக் கொண்டுள்ளோம். எனவே அல்லாஹ் இது தொடர்பாக நமக்கு கட்டளை வழங்கியுள்ளான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இந்த முன்னறிவிப்பை செய்தள்ளார்கள்.

அதாவது இறுதி காலத்தில் மஸீஹ் மற்றும் மஹ்தி தோன்றும்போது அவரை ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் அவரிடம் பைஅத் செய்யுங்கள். மேலும் அவரது ஜமாஅத்தில் இணைந்து விடுங்கள். மேலும் அவருக்கு எனது சலாத்தை எட்ட வையுங்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: நிச்சயமாக என் இறைவன் எனக்கு நேரான பாதையைக் காட்டியுள்ளான். (அது) நிலைநிற்கக்கூடிய மார்க்கமாகும். (மேலும் அது) உண்மையில் நிலைத்து நின்ற இப்றாஹீமின் மார்க்கமுமாகும். அவர் இணை வைப்பவர்களைச் சார்ந்தவராக இருந்ததில்லை. (6:162)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

எனவே வரக்கூடிய மஸீஹ் மற்றும் மஹ்தி இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கொண்டு வரப்பட்ட மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக வருவார். மேலும் இதனை உலகத்திற்கு மீண்டும் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக வருவார். மேலும் சில சுயநல ஆலிம்கள் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை தவறாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர். எனவே அவர் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காக வருவார். இதன் மூலம் நீங்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் மூலமாக இஸ்லாத்தின் மறுமலர்ச்சி ஏற்படும். மேலும் புதியதொரு காலகட்டம் வெளிப்படும். மேலும் பீர்மார்களும், பெயர்தாங்கிய ஆலிம்களும் தனது விருப்பத்திற்கேற்ப உருவாக்கியுள்ள இஸ்லாத்தின் அழகிய போதனைகளை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் இறைவனது குறிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப உண்மையான இஸ்லாமிய போதனையை உலகிற்கு முன் எடுத்து வைப்பார்.

எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்ளுங்கள். மேலும் அவர்களது அறிவுரைகள் மற்றும் கூற்றுகளின்படி செயல்படுவது ஒரு சாதாரண விஷயமல்ல. மாறாக, இதுதான் உண்மையான இஸ்லாம் ஆகும். இந்த அடிப்படையில் நம்மில் ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை மிகவும் கவனமாக செவியேற்க வேண்டும். மேலும் அதன்படி செயல்பட வேண்டும். அவ்வாறில்லையென்றால் பிறகு அன்னாரிடம் பைஅத் செய்துள்ளதாக நாம் வாதம் செய்வது ஒரு வெற்று வாதமாகவே இருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக கூறியுள்ளார்கள். அதாவது நான் நெறிநீதி தீர்ப்பவனாக இருக்கின்றேன். நீங்கள் என்னிடம் பைஅத் செய்தும் மேலும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து நான் அனுப்பப்பட்டுள்ளதாக கருதி பிறகும் கூட எனது கூற்றின்படி செயல்படவில்லையென்றால், மேலும் நான் எடுக்கின்ற முடிவுகள் மற்றும் நான் வழங்குகின்ற அறிவுரைகளின்படி செயல்படவில்லை என்றால் பிறகு நீங்கள் உங்களது ஈமானை குறித்து கவலை கொள்ளுங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நாம் அதிமாக கவலை கொள்ள வேண்டும். அதாவது ஒரு புறம் நாம் நமது நாட்டிலிருந்து இந்த நாட்டிற்குள் வந்ததன் நோக்கம் என்னவென்றால், நாம் நமது நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுவதிலிருந்து தடுக்கப்படுகின்றோம் என்பதாகும்.

மற்றொரு புறம், எவர் மீது ஈமான் கொண்டதற்காக நாம் ஹிஜ்ரத் செய்துள்ளோமோ அவரது கூற்றின் மீது நாம் கவனம் செலுத்தவில்லை என்றால், இங்கு வந்த அதை நாம் மறந்து விட்டோம் என்றால், உலக பொலிவுகளைப் பார்த்து, நமது ஈமான் நம்மிடம் எதை எதிர்பார்க்கின்றது? என்பதை நாம் மறந்து விட்டால் பிறகு அதிகமாக கவலை கொள்ள வேண்டும்.

நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டுள்ளோம். மேலும் மஸீஹ் மற்றும் மஹ்தியின் கரங்களில் பைஅத் செய்து, மார்க்கத்தை புதுப்பிப்போம்; மார்க்கத்தை மீண்டும் உயிரூட்டுவதற்காக முழுமையாக முயற்சி செய்வோம்; எங்களிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று உடன்படிக்கை செய்துள்ளோம். ஆனால் இங்கு வந்து உலக பொலிவுகளைக் கண்டு, எவ்வாறு அதிகம் அதிகமாக பணம் சம்பாதிப்பது? செல்வத்தை எவ்வாறு சம்பாதிப்பது? என்று நாம் பார்ப்போம் என்றால் பிறகு அதற்காக நாம் கவலைப்பட வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் நமக்கு கவனமூட்டிய விஷயம் என்னவென்றால், நாம் அன்னாரது பைஅத்தில் வந்த பிறகு அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும். காட்டுவதற்காக கவனம் செலுத்தக்கூடாது. மாறாக, உண்மையான முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

எவ்வாறு கவனம் செலுத்த வேண்டும்? எவ்வாறு அல்லாஹ்வின் மீதான அன்பை நிலைத்திருக்கச் செய்ய வேண்டும்? என்று நேற்றைய குத்பாவில் நான் குறிப்பிட்டவாறு தொழுகையை சரி செய்யும்படி கூறியிருந்தேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த விஷயத்தின் பக்கமே அழுத்தம் கொடுத்துள்ளார்கள். அதாவது தொழுகையை சரி செய்யுங்கள். மேலும் இஸ்திஃபார் செய்வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இஸ்திஃபார் செய்வதன் மூலம் மனிதன் பல வகையான தவறான எண்ணங்களிலிருந்து தப்பித்துக் கொள்கின்றான். தவறான பணிகளை செய்வதிலிருந்து தப்பித்துக் கொள்கின்றான். எனவே இஸ்திஃபார் செய்வதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாவமன்னிப்பு கேட்டுக் கொண்டே இருங்கள். மேலும் மரணத்தை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்விடம் எப்போதும் மன்னிப்பை கேட்டுக் கொண்டிருங்கள். மேலும் மரணம் நிச்சயிக்கப்பட்டது. ஒரு நாள் வந்தே தீரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மனிதன் மரணத்தை நினைவில் கொள்ளும்போது பிறகு இறைவன் பக்கம் அவனுக்கு கவனம் ஏற்படுகின்றது. மேலும் இந்த உலகம் சில நாட்களுக்குரியது. இதுவே எனது வாழ்க்கையின் நோக்கமல்ல. மாறாக, மரணத்திற்கு பிறகுள்ள வாழ்க்கையே உண்மையான வாழ்க்கையாகும் என்ற உணர்வு அவரிடம் ஏற்படுகின்றது.

இதன் உண்மைத்துவம் நமக்கு தெரிந்து விட்டால், மேலும் இந்த உணர்வு நமது உள்ளத்தில் ஏற்பட்டு விட்டால் பிறகு உலக பொருட்களை அடைவதற்காக நாம் எந்நேரமும் செய்து வருகின்ற முயற்சிகளை நாம் செய்ய மாட்டோம்.

மேலும் இந்த பெண்ணின் நகை நன்றாக இருக்கிறது. எனவே நானும் அதைப்போன்றே செய்ய வேண்டும் என்பதன் பக்கம் கவனம் இருக்காது. மேலும் இந்த பெண்ணின் வீடு மிகப்பெரியதாக இருக்கிறது. எனவே நாமும் அவ்வாறான வீட்டை வாங்க வேண்டும் என்பதன் பக்கம் கவனம் இருக்காது.

குறிப்பாக பெண்களிடையே, இந்த பெண் நல்ல பேஷன் ஆடைகளை அணிந்திருக்கின்றாள். நானும் அதுபோன்று வாங்க வேண்டும் போன்ற பேஷனிற்கான விஷயங்கள் பேசப்படுகின்றன. மேலும் இங்கு வந்து கிடைக்கின்ற பணத்தில் பாகிஸ்தான்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்விற்கே உரியன. (6:163)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

டிசைனில் ஆடைகளை தைப்பதற்கான ஆர்வம் ஏற்படுகிறது. ஆனால் அந்த ஆடைகள் இங்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். அதை வாங்குவதற்கான ஆற்றல் இருக்கிறதோ இல்லையோ நாம் அந்த பேஷன் ஆடையை தான் வாங்க வேண்டும் என்று அழுத்தம் தரப்படுகிறது. நிச்சயமாக அணியுங்கள். ஆனால் உங்கள் எல்லைக்குட்பட்டவாறு அணியுங்கள். உலக பொருட்களின் மீது பார்வையை வைத்திருப்பது ஒரு நம்பிக்கை கொண்டவரின் பணியல்ல. அல்லாஹ்வின் அருட்களிலிருந்து பயன் பெற வேண்டியதுதான். ஆனால் இந்த பொருட்களைப் பெறுவதற்காக வீட்டில் கூச்சலும் குழப்பமும் ஏற்படக்கூடாது.

போட்டி போடுவது நல்ல விஷயம் தான். போட்டி போட வேண்டுமென்றால் அல்லாஹ்விடம் இந்த துஆவை செய்யுங்கள். அதாவது இந்த நபர் மார்க்கத்திற்காக பெரும் தியாகத்தை செய்துள்ளார். அல்லாஹ்வே எனக்கும் இதை விட அதிகமாக தியாகம் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவாயாக. இந்த நபரின் குழந்தைகள் மிகவும் நல்லவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு தொழுகையிலும் கவனம் இருக்கின்றது. மேலும் மார்க்க பணிகளிலும் அவர்களுக்கு கவனம் இருக்கின்றது.

அல்லாஹ்வே! எனக்கும் தொழுகையின் உரிமையை செலுத்தக்கூடிய நற்பாக்கியத்தை வழங்குவாயாக. மேலும் இதற்காக நான் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ் எனது குழந்தைகளையும் மார்க்கத் தொண்டாற்றுவதில் ஈடுபடக் கூடியவர்களாக ஆக்குவானாக. மேலும் இறை வணக்கத்தை செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவானாக.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கை கொண்ட அஹ்மதி ஆணிடமும், பெண்ணிடமும் மார்க்க விஷயத்தில் முன்னேறுவதற்கான ஆன்மா இருக்க வேண்டும். உலக விஷயங்களில் முன்னேறுவதற்காக இருக்கக் கூடாது. நாம் இந்த சிந்தனையுடன் அல்லாஹ்வின் முன் குனியும் போது பரந்த அருளும், கருணையும் கொண்ட அல்லாஹ் தன் பக்கம் வருகின்றவர் மீது தனது அன்பான நடைமுறையை வெளிப்படுத்துகின்றான். மேலும் அடியார்களின் நல்ல விருப்பங்களையும், துஆக்களையும் செவியேற்கின்றான். மேலும் அவரது நல்ல செயல்களை ஏற்றுக் கொள்கின்றான்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உண்மையான அடியாளாக பெண் ஆகும்போது அதன் தாக்கம் அவளை மட்டும் சார்ந்ததாக இருப்பதில்லை. மாறாக, அவளது குழந்தைகளின் மீதும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதிகப்படியான நல்ல பெண்கள் ஆண்களையும் நன்மையின் பக்கம் கொண்டு வந்துள்ளார்கள்.

எனவேதான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பு நிறுவினார்கள். அதாவது பெண்கள் தாமும் நன்மைகளில் முன்னேற வேண்டும். ஜமாஅத் பணிகளிலும் முன்னேற வேண்டும். இதன் மூலம் அவர்கள் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்ல வேண்டும்.

குறிப்பாக பெண் பிள்ளைகள் பெரிய வயதை அடையும் வரை தாய்மார்களின் செயல்களை பார்க்கின்றது. நமது தாய் என்ன செய்கின்றார்? என்று அவள் பார்க்கின்றாள். தனது தாயை இறை வணக்கம் செய்யக் கூடியவளாகவும், திக்ரே இலாஹி செய்யக் கூடியவளாகவும் காண்கின்றபோது ஒரு நல்ல தாக்கம் அவள் மீது ஏற்படுகின்றது.

நமது அடுத்த சந்ததிகளில் இறைவணக்கம் செய்யக்கூடிய பிள்ளைகள் உருவாகி விட்டால் பிறகு நாம் நிச்சயமாக நமது பிள்ளைகளை உலகத்தின் தீமைகளிலிருந்து பாதுகாக்கக் கூடியவர்களாகவும், இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லக்கூடியவர்களாகவும் ஆகி விடுவோம். எனவே ஆண்களும், பெண்களும் இந்த பொறுப்பை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக இந்த நாடுகளில் சுதந்திரம் மற்றும் பரந்த சிந்தனை என்ற பெயரில் எப்படிப்பட்ட விஷயங்களை வெளிப்படுத்துகின்றனர் என்றால் அதன் மூலம் எல்லா எண்ணங்களும் தூண்டப்படுகிறது. இந்த நாடுகளில் இறையச்சத்தை ஏற்படுத்துவதற்கு குறிப்பாக பெரும் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே ஒவ்வொரு அஹ்மதி ஆண் மற்றும் பெண்ணின் பணி என்னவென்றால், இறையச்சத்தில் முன்னேறுங்கள். அதன் மூலம் நன்மைகள் செய்வதற்கு நற்பாக்கியம் கிடைக்க வேண்டும். அல்லாஹ்வின் நெருக்கம் கிடைக்க வேண்டும். உலகத்தின் தீமைகளிலிருந்து நாம் தப்பிக்க வேண்டும். நமது பைஅத்தின் உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக நாம் திகழ வேண்டும். நாம் நம்மிடம் உண்மையான இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாக ஆகுவதற்கும், அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகக் கூடியவர்களாகவும் ஆகுவதற்கு அல்லாஹ் நற்பாக்கியத்தை வழங்குவானாக. இப்போது துஆ செய்யுங்கள்.

ஹுஸூர் அவர்களின் இந்த சொற்பொழிவு 1:35 வரை நீடித்தது. இறுதியில் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள். இதற்குப் பிறகு நாஸிராத் மற்றும் லஜ்னா ஆகியோர் பல்வேறு குழுக்களாக டச், அரபி, உருது, பங்களா போன்ற மொழிகளில் துஆக்கள் அடங்கிய நஸ்ம் படித்தார்கள். இறுதியில் ஆப்ரிக்காவைச் சார்ந்தவர்கள் தமக்கே உரிய பாணியில் கலிமா தய்யிபாவை படித்துக் காட்டினார்கள்.

இதற்குப் பிறகு 2 மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஆண்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்து லுஹர் மற்றும் அஸர் தொழுகைகளை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்றார்கள்.

### ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்களுடன் சொற்பொழிவு

இன்று ஆண்கள் மாநாட்டுத் திடலில் ஹுஸூர் அவர்களுடன் முஸ்லிம் அல்லாத மற்றும் ஜமாஅத்தைச் சாராத விருந்தினர்களின் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் பல்வேறு சமுதாயத்தைச் சார்ந்த 125 விருந்தினர்கள் கலந்து கொண்டனர். விருந்தினர்களில் மிகப்பெரிய எண்ணிக்கை அண்டை நாடான பெல்ஜிய்யத்திலிருந்து கலந்து கொண்டது.

இந்த விருந்தினர்களில் கீழ்க்கண்டவர்கள் கலந்து கொண்டனர்:

**திருக்குர்ஆனிலிருந்து...**

இவ்வேதம் உமக்கு இறக்கப்பட்டது. எனவே இது குறித்து உமது உள்ளத்தில் எவ்வித இறுக்கமும் ஏற்பட வேண்டாம். நீர் இதனைக் கொண்டு எச்சரிக்கை செய்யவும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஓர் அறிவுரையாகவும் (இது உள்ளது). (7:3)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

Nunspeet ன் மேயர் DHR. Van De Weerd

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் DHR. Harry Van Bommel Patron Ihrc

DHR. Ewout Klei

குழந்தைகள் மன நல மருத்துவர் Nikita Shahbazi

டச் சுப்ரீம் கோர்ட்டின் நீதிபதி Mrs. Dana Baldinger அவர்கள் தனது குடும்பத்துடன் வந்திருந்தார்கள்.

பேச்சாளர் Mr. Herman Meester (Linguistics & Economics)

குற்றவியல் நீதிபதி Mr. IC Gillesse

லாஹூரி ஜமாஅத்தின் சேர்மன் DHR. Jahier Khan

இதுமட்டுமின்றி வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பல்வேறு துறைகள் மற்றும் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஹுஸூர் அவர்கள் 4:30 மணிக்கு ஆண்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் திருக்குர்ஆன் திலாவத் செய்யப்பட்டது. மதிப்பிற்குரிய அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். பிறகு டச் மொழியில் இதற்கான மொழியாக்கம் எடுத்துக் கூறப்பட்டது.

இதற்குப் பிறகு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு விருந்தினர் Mr. L.Klappe Elderman Gemeente Ermelo அவர்கள் தமது கருத்தை தெரிவித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் அதிகமான தன்னார்வத் தொண்டுகளை செய்கின்றீர்கள். சமூகத்தின் செயல் துடிப்புள்ள அங்கமாக இருக்கின்றீர்கள். எங்களது பகுதிகளில் உங்களது ஜமாஅத் அதிகமான பணிகளை செய்துள்ளது. எங்களது ஆசை என்னவென்றால், உங்களது சமூகத்தைச் சார்ந்த மக்கள் எங்களது நகரங்களில் குடிபெயர்ந்து வந்து கொண்டே இருக்க வேண்டும். இப்போது குடிபெயரவில்லைதான். நீங்கள் எப்போது எங்களது நகரத்திற்கு வந்தாலும் எங்களுடன் ஒரு வலுவான தொடர்பை ஏற்படுத்துகின்றீர்கள். அதன் மூலம் நமக்கிடையே அன்பு, சகோதரத்துவம் ஆகியவை அதிகரிக்கின்றது. நீங்கள் ஒரு அமைதி நிறைந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் ஆவீர்கள். மேலும் மார்க்க சுதந்திரத்தை சரியான முறையில் பயன்படுத்துகின்றீர்கள்.

இதற்குப் பிறகு பாராளுமன்றத்தின் உறுப்பினரான Harry Van Bommel சாஹிப் அவர்கள் தமது கருத்தை தெரிவித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் தாய்லாந்து, மலேஷியா நாடுகளைச் சார்ந்த அஹ்மதி அகதிகள் தொடர்பாக முயற்சி செய்து வருகின்றோம். இவர்களது விவகாரத்தை ஹாலந்து பாராளுமன்றத்திலும் எழுப்பினோம். இறைவன் நாடினால் நாம் இவர்களுக்கு உதவி செய்வதில் வெற்றி பெற்று விடுவோம். இங்கும், ஐரோப்பாவிலும் வழிகள் திறக்கும். நான்கு மாதத்திற்கு முன்பு நான் ஹாலந்து மற்றும் மலேஷியா சென்றிருந்தேன். மேலும் அகதிகளை சந்தித்தேன். அங்கு அவர்கள் மிகுந்த துன்பம் மற்றும் கஷ்டத்தில் நிலையில் இருக்கின்றனர்.

இதற்குப் பிறகு மேயர் Gemeente Nunspeet (DHR.B.Van De Weerd) சாஹிப் அவர்கள் தமது கருத்தை தெரிவித்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இங்கு வந்தது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. கலீஃபா அவர்களை நாங்கள் இங்கு வரவேற்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் உள்ள தொடர்பு மிகவும் பழையதாகும். எங்களது சமூகத்தில் உங்களுக்கு ஒரு குறிப்பான அந்தஸ்து இருக்கின்றது. உங்களது அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவை எங்களுக்கு அவசியமாகும். உங்களது மாநாடு ஒரு மார்க்க மாநாடாகும். இந்த அடிப்படையில் உங்களது மாநாடு மிகவும் குறிப்பான ஒன்றாகும். இந்த மூன்று நாட்களில் நாம் அனைவரும், நமது வாழ்க்கையின் நோக்கம் என்ன? மேலும் நாம் நமது சமூகத்தை எவ்வாறு சிறந்தாக ஆக்க முடியும்? என்ற விஷயத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். இந்த கேள்விகளுக்கான பதிலை தேடுவதற்கு நீங்கள் முயற்சி செய்வீர்கள் என்று நாம் நம்புகின்றேன்.

இதற்குப் பிறகு 4:50 மணிக்கு ஹுஸூர் அவர்கள் ஆங்கில மொழியில் சொற்பொழிவாற்றினார்கள்.

(உருது பத்ர், 24,31 அக்டோபர் 2019)

தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! உங்கள் அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக. இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநர் ஆகியோருக்கு எதிராக கடந்த பல வருடங்களாக பேசப்பட்டு வரும் நிலையில் எவர்கள் நமது அழைப்பை ஏற்று, இன்று நம்முடன் இருக்கின்றார்களோ அவர்களுக்கு நான் முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

உண்மையில் இஸ்லாம் தொடர்பாக தவறான தகவல்களையும், பகைமையை பரப்புவதற்காகவும் மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் மீது கறை படியச் செய்வதற்காகவும் ஒட்டுமொத்த அளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒரு முஸ்லிம் சமூகம் சார்பாக நடத்தப்படுகின்ற மார்க்க நிகழ்ச்சியில் நீங்கள் கலந்து கொண்டது, உங்களது பரந்த மனப்பான்மைக்கு சான்று பகர்கின்றது. உங்களது இந்த செயலை நான் புகழ்கின்றேன். மேலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் உங்களது பரந்த மனப்பான்மை எப்போதும் உங்களுடன் இருப்பதற்காகவும், அனைத்து சமூகத்தைச் சார்ந்த மக்களும் அமைதியுடனும், ஒருவர் மற்றவருடன் அன்புடனும், கண்ணியத்துடனும் இருந்து வருவதற்கும் நான் துஆ செய்கின்றேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அஹ்மதி முஸ்லிம்களாகிய எங்களது உறுதியான நம்பிக்கை என்னவென்றால், மார்க்கம் என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விவகாரமாகும். இது உள்ளம் தொடர்பான விவகாரமாகும். மற்றவர்களின் கொள்கைகளைப் பற்றி தவறான விஷயங்களைக் கூறுவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. மற்றவர்களின் புனித நபர்களைப் பற்றி எவரும் எள்ளி நகையாடக்கூடாது. ஏனென்றால் மக்களுடன் பகைமையின்மையை வெளிப்படுத்துவதனால் வேதனையும், துன்பமுமே உருவாகின்றது. இன்னும் அதிகமான விரிசலே ஏற்படுகின்றது. இதற்கு நேர்மாற்றமாக ஒருவர் மற்றொருவருக்கு கண்ணியம் அளிப்பதன் மூலம் அமைதிகரமான சமூகத்தை நம்மால் கட்டமைக்க முடியும்.

நான் கூறியதுபோன்று, முஸ்லிம் அல்லாத நாடுகளில் ஒரு நீண்ட காலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு வருகிறது. இங்கு ஹாலந்திலும் கூட சில மக்கள் இஸ்லாத்திற்கு எதிராக பகைமையை பரப்ப மும்முரமாக செயல்படுகின்றனர். இம்மக்கள் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முற்றிலும் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றனர். எனவே இது தொடர்பாக இந்த குறுகிய நேரத்தில் இஸ்லாத்தின்

உண்மையான போதனைகள் தொடர்பாகவும், இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் தொடர்பாகவும் எடுத்துக் கூறுவேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதற்கு முன்பாக நான் அமைதி என்றால் என்ன? மேலும் ஏன் இது முக்கியமான ஒன்றாகும்? என்பது தொடர்பாக எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

தனிப்பட்ட ரீதியில் அமைதி எத்தகைய விஷயம் என்றால் இதனை அடைவதற்கு நம்மில் ஒவ்வொருவருக்கும் விருப்பம் இருக்கின்றது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் பரந்த அளவில் அமைதி என்பது எத்தகைய விஷயமாக இருக்கின்றது என்றால் இதனை அடைவதற்கு ஒவ்வொரு சமுதாயமும் வாதம் செய்கின்றது.

எவ்வாறிருப்பினும் அமைதி என்றால் என்ன? மேலும் நமக்கு இதன் அவசியம் என்ன? எனது எண்ணத்தின்படி அமைதி என்பது இரு வகைப்படும். ஒன்று, வெளிப்புற அமைதி ஆகும். மற்றொன்று உட்புற அமைதி ஆகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பெரும்பான்மையான மக்கள் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் இருப்பதைப் போன்று வெளிப்படையாக வெளிப்படுத்திக் காட்டலாம். எவ்வித சந்தேகமுமின்றி உட்புற ரீதியிலும் அவர்களுக்கு நிம்மதியை தருவதாக தென்படலாம். ஆனால் உட்புற ரீதியாக அவர்களுக்கு அமைதியை பெறாதவர்களாக இருக்கின்றார்கள்.

உதாரணமாக, ஆற்றல் படைத்தவர்களில் பெரும்பான்மையினர் அமைதியை நிலைநாட்டுவது குறித்து பேசுகின்றனர். அவர்களிடம் உலகத்தின் அனைத்து செல்வ செழிப்புகளும், வசதிகளும் இருக்கத்தான் செய்கின்றது. இருப்பினும் அவர்களில் பெரும்பான்மையினர் மன நிம்மதியை தேடுவதையும், மன அழுத்தத்திற்கு ஆளாகி இருப்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர். வெளிப்படையாகவும், உலகியல் ரீதியாகவும் அவர்கள் விரும்புகின்ற அனைத்து பொருட்களும் அவர்களிடம் இருக்கின்றது. இருப்பினும் அவர்கள் கவலையிலும், அச்சத்திலும் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். மேலும் அவர்களது உள்ளம் நிம்மதியில்லாமல் இருக்கின்றது.

ஆக உண்மை என்னவென்றால், எப்போது வரை ஒரு மனிதன் மன நிம்மதியை பெறவில்லையோ அப்போது வரை அவனிடம் இருக்கின்ற அனைத்து செல்வ செழிப்பும் ஒன்றுமற்றதாகும். புரியும் வகையில் கூறுவதாயின், பணம் கொடுத்து வாங்க முடியாத ஒரு பொருள் மன நிம்மதி ஆகும்.

உதாரணமாக, ஒரு செல்வ செழிப்பை பெற்றிருக்கின்ற தாய், அவளிடம் தேவையை விட அதிகமான செல்வங்கள் இருந்தாலும் அவளுடைய குழந்தை காணாமல் போய் விட்டால் பிறகு அவளிடம் இருக்கின்ற இந்த செல்வ செழிப்பான நிலையிலும் அவளுடைய குழந்தை அவளுக்கு கிடைக்காத வரை அவள் பைத்தியத்தைப் போன்று ஆகி விடுகின்றாள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: முன்னேற்றமடைந்த நாடுகள் மற்றும் முன்னேற்றமடைந்து வருகின்ற நாடுகள் ஆகிய இரு வகையான நாடுகளும் அறிவியல் ரீதியான விஷயங்கள் முன்னேற்றமடைந்து வருகின்றது. ஆனால் செல்வம் படைத்த நாடுகளைச் சார்ந்தவர்களின் அதிகமானோர் பொருளாதார நிலையில் வலிமையைப் பெற்றிருந்தும் தற்கொலை செய்து கொள்கின்றனர். உடல் உறுப்புகளின் பாதிப்புகளுக்கும், ரிப்ரெக்ஷனின் பாதிப்புகளுக்கும் ஆளாகி வருகின்றனர்.

மேலும் இந்த விஷயத்திலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதாவது சமூகத்தில் பலவீனமான மற்றும் ஒன்றுமற்ற மக்கள் தனது அடிப்படையான தேவைகளைக் கூட அவர்களால் பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர். மற்றவர்களுக்கு கிடைத்துள்ள செல்வ செழிப்பான நிலையை அடைவதற்கு அதிகமாக விருப்பம் கொண்டிருக்கின்றனர். எனினும் அவர்களிடமும் மன நிம்மதி குறைவாக இருக்கின்றது.

ஆக நிராசை மற்றும் நிம்மதியற்ற நிலை ஆகியவற்றை செல்வந்தர்கள், ஏழைகள் ஆகிய இருவராலும் உணர முடியும்.

ஒரு புறம் செல்வந்தர்களிடம் அவர்களின் தேவைகளுக்கான அனைத்து பொருட்களும் இருந்த போதிலும் அவர்கள் மன நிம்மதி இல்லாதவர்களாக இருக்கின்றனர். மறுபுறம் தேவையுடையவர்கள், ஏழைகள் தத்தமது நிலைமையினால் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கின்றனர். மேலும் மற்றவர்களைப் போன்று நிம்மதியான வாழ்க்கையைப் பெறுவதற்கு அவர்கள் விரும்புகின்றனர்.

எவ்வித ஐயமுமின்றி மக்களுக்கு அவர்களின் நோக்கங்களும், ஆசைகளும் வெவ்வேறானவையாக இருப்பினும், மேலும் உலகியல் ரீதியாகவும் ஒருவர் மற்றவர்களை விட வேறுபட்டவர்களாக இருப்பினும் மன நிம்மதியைப் பெறுவதில் தோல்வியை தழுவியுள்ளனர் என்பதில் இவர்கள் இருவருமே ஒருவர் மற்றவரைப் போன்றவர்கள்தான்.


ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்றைய நாட்களில் உலக பிரச்சனைகளுக்கு, மார்க்கங்கள்தான் காரணம் என்றும் குறிப்பாக இஸ்லாத்தை அதற்கான காரணமாக ஆக்குவதற்கு முற்படுகின்றனர். ஆனால் உட்புற நிம்மதியின்மை மற்றும் மன நிம்மதியற்றவர்களாக இருக்கின்றவர்களில் பெரும்பான்மையினர் மார்க்கத்தை விட்டு தொலை தூரமாக இருந்தவாறு வாழ்க்கையை கழிப்பவர்களாகவே இருக்கின்றனர். எனவே இந்த பிரச்சனைகளுக்கு, இஸ்லாத்தையோ அல்லது வேறு ஏதாவதொரு மார்க்கத்தையோ குற்றஞ்சாட்ட முடியாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஒரு மார்க்க தலைவர் என்ற அடிப்படையில் எனது நம்பிக்கை என்னவென்றால், தற்காலத்தின் பிரச்சனைகளுக்கு மார்க்கம் காரணமாக இருப்பதற்கு பகரமாக அதற்குரிய தீர்வாக மார்க்கம் இருக்கின்றது. மேலும்இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இதற்கான தீர்வு மிகவும் எளிதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு இந்த போதனையை வழங்கியுள்ளார்கள். அதாவது உண்மையான மன அமைதியை பெறுவது என்பது இவ்விஷயத்தை எதிர்பார்க்கின்றது. அதாவது மனிதன் அல்லாஹ்வை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். மேலும் அவனுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இஸ்லாத்தில் அடிப்படையில், அல்லாஹ்வின் பண்புகளில் ஒரு பண்பு அவன் அமைதியின் பிறப்பிடமாக இருக்கின்றான் என்பதும் ஆகும். அவன் அனைத்து

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

Love for All Hatred for None

எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

படைப்பினங்களுக்காகவும், மார்க்கம் மற்றும் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டு அமைதிகரமான வாழ்க்கையை கழிக்க வேண்டும் என்று விரும்புகின்றான்.

அதுமட்டுமின்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த போதனையை வழங்கியுள்ளார்கள். அதாவது அல்லாஹ் அனைத்து படைப்பினங்களையும் பரிபாலிக்கக் கூடியவனாகவும், ரிஸ்கை (வாழ்வாதாரத்தை) வழங்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் முஸ்லிம்களை மற்றும் பரிபாலிப்பதில்லை.

மாறாக, அவனது கருணையானது அனைத்து படைப்பினங்களின் மீதும் இருக்கின்றது. அவர் கிறித்தவராக இருந்தாலும் சரி; இந்துவாக இருந்தாலும் சரி; யூதராக இருந்தாலும் சரி அல்லது மற்ற மார்க்கங்களைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி. மேலும் எந்த மார்க்கத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தாலும் மேலும் அல்லாஹ்வின் இருப்பையே மறுக்கக் கூடியவர்களாக இருந்தாலும் சரியே.

இஸ்லாம் முஸ்லிம்களுக்கு போதனை வழங்குகின்றது. அதாவது அவர்கள் தனது அனைத்து ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொள்ள வேண்டும். எனவேதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் மீண்டும் மீண்டும் பல முறை கூறினார்கள்:

அவர்கள் கருணை உள்ளம் கொண்டவர்களாக திகழ வேண்டும். மேலும் அவர்கள் ஒருவர் மற்றவர்களை கருத்தில் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒருவர் மற்றவர் மீது சாந்தியை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் ஸ்தாபகர் பொன் எழுத்துக்களால் எழுதப்பட வேண்டிய தத்துவத்தை வழங்கியுள்ளார்கள். அதாவது ஒரு முஸ்லிம் தனக்காக விரும்புபவற்றையே மற்றவர்களுக்காகவும் விரும்ப வேண்டும்.

எனது பார்வையில் இந்த சாதாரணமான ஆனால் மிகவும் ஆழமான கருத்தை முஸ்லிம்கள் மட்டுமின்றி மற்றவர்களும் பின்பற்றி நடந்தால் பிறகு இது சமூகத்தில் நீண்ட காலம் அமைதியை ஏற்படுத்தும் வழியாக நிரூபணமாகும்.

ஒவ்வொரு நபரும் தனக்காகவும், தனது விருப்பத்திற்குரியவர்களுக்காகவும் அமைதியை விரும்புகின்றார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் தனது எதிரிகளும் அமைதிகரமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று விரும்புவதாக மக்கள் வாதம் செய்வார்வார்களேயானால் பிறகு அவர்களில் பெரும்பான்மையினர் பொய்யே பேசுகின்றனர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக இதுவே நல்லவர்களின் தரமாகும். மேலும் பரந்த மனப்பான்மைக்கான ஆன்மாவாகும். இதனைத்தான் இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. இஸ்லாம் எத்தகைய மார்க்கமாகவும், போதனையை தரக்கூடியதாகவும் இருக்கின்றது என்றால் அது தன்னலமற்ற செயலை ஊக்குவிக்கின்றது. மேலும் மனித இனத்திடம் எல்லா வகையான சுயநலத்தையும் விட்டு விடுவதன் பக்கம் அழுத்தம் தருகின்றது.

இஸ்லாத்தின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த தத்துவத்தை கூறியுள்ளார்கள். அதாவது மனிதன் பரந்த மனப்பான்மையைக் கொண்டவனாக இருக்க வேண்டும். மேலும் அவனது எண்ணத்தில் எந்த கலப்படமும் இருக்கக் கூடாது. தனக்காக அவர் நல்லதை விரும்புவதை விட மற்றவர்களுக்காகவும் அவர் அதையே விரும்ப வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இன்றைய உலகில் இதற்கு நேர்மாற்றமாகவே தென்படுகின்றது. சுயநலம் மற்றும் பேராசையானது சமூகத்தை அழித்து விட்டது. குழப்பம் மற்றும் போர் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. மேலும் நீதி மற்றும் சமத்துவத்தின் தத்துவம் ஆகியவை தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படுகின்றது. இந்த விஷயங்கள் செல்வந்தர்கள் மற்றும் ஆற்றல் படைத்த நாடுகள் ஏற்படுத்தியுள்ள பாலிஸியிலிருந்து வெளிப்படுகின்றது.

தற்போதைய வரலாறு தெரிவிப்பது என்னவென்றால், ஆற்றல்மிக்க சக்திகள் அமைதியை நிலைநாட்டுகின்றோம் என்ற பெயரில் தொலை தூரப் பகுதிகளுக்கு தனது படையை அனுப்புகின்றது. ஆனால் இதற்குப் பின்னால் உண்மையான நோக்கம் அவர்களது தனிப்பட்ட பலன் இருப்பதையும், அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதும் தான் இருக்கின்றது என்பதை காலம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

மேலும் இதுபோன்ற கருத்து வேறுபாடுகளினால் இவர்களின் படையைச் சார்ந்த ஒரு வீரர் மரணமடைந்தாலும் பிறகு பெரும் அசாதாரண சூழ்நிலை ஏற்படுகின்றது. பிறகு அவர்கள் பழிவாங்குதல் தொடர்பான சத்தியங்களை செய்கின்றனர். இன்னும் சொல்வதென்றால், இவர்களது குண்டுகள் மற்றும் இதர ஆயுதங்கள் மூலமாக ஆயிரக்கணக்கான அப்பாவி குடிமக்களின் உயிரை பறிப்பதற்கான காரணியாக அமைந்து விடும்போது இவர்கள் எவ்வித வருத்தத்தையோ அல்லது கவலையையோ வெளிப்படுத்திக் காட்டுவதற்காகக் கூட செய்வதில்லை. இத்தகைய அநீதியின் விளைவு அழிவை தரக்கூடியதாக அமைகின்றது.

உள்ளூர்வாசிகளின் வாழ்க்கையின் மதிப்பும், தகுதியும் ஆற்றல்மிக்க சமுதாயங்களைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையை விட குறைவாக இருப்பதைப் பார்க்கின்றபோது இத்தகைய பாகுபாட்டின் காரணமாக அவர்கள் நிராசையும், கோபமும் மற்றும் பகைமையிலும் மூழ்கி விடுகின்றனர். பிறகு அவர்களது உணர்வுகள் ஏதாவதொரு நேரத்தில் வெளிப்பட்டு அது மிகவும் அபாயகரமாக ஆகி விடுகின்றது. பிறகு அந்த சமுதாயங்களின் அமைதியும், பாதுகாப்பும் அழிந்து விடும். ஆனால் இதனால் இவர்களிடம் எந்த தாக்கமும் ஏற்படாது என்று உலகியல்வாதிகள் கருதுகின்றனர்.

(உருது பத்ர், 31 அக்டோபர் & 7 நவம்பர் 2019 – தொடரும்...)

**இளைஞர்கள் சீர்திருந்தாதவரை சமுதாயங்கள் சீர்திருந்தாது. (முஸ்லிஹ் மவ்வூது)**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

## திருக்குர்ஆனிலிருந்து...

உம்முடைய இறைவன் தன்னிறைவு பெற்றவன். அருளுடையவன். அவன் நாடினால் உங்களை அழித்துவிட்டு உங்களைத் தோற்றுவித்ததுபோன்று மற்றொரு சமுதாயத்தின் சந்ததியிலிருந்து அவன் நாடுபவரை உங்களுக்குப் பின்னர் உங்களுடைய இடத்தில் அமர்த்துவான். (6:134)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 30 April 2020 Issue No. 18

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இக்காலத்தில் உருவாக்கியுள்ள புதிய கண்டுபிடிப்புகளில் மிகச்சிறந்த கண்டுபிடிப்பு என்னவென்றால், TV, பெரிய திரைகள் ஆகியவற்றில் ஆண்கள் தரப்பிலிருந்து வருகின்ற சப்தத்தை பெண்கள் கேட்கக்கூடிய மற்றும் பல்வேறு சொற்பொழிவுகளின் நிழற்படங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை பெண்கள் இதன் மூலம் பார்த்துக் கொள்ள முடிகிறது. ஆண்கள் மத்தியில் காலத்தின் கலீஃபா நிகழ்த்துகின்ற சொற்பொழிவும் TV, மற்றும் பெரிய திரைகளின் மூலம் பார்க்கவும் கேட்கவும் முடிகிறது. இது பெண்களுக்கு போதுமானதாக இருந்திருக்க வேண்டும். இருப்பினும் மாநாட்டில் வைக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளில் காலத்தின் கலீஃபாவின் சொற்பொழிவையும் வைக்கின்றனர்.

ஏனென்றால் காலத்தின் கலீஃபா நேரடியாக இந்த மாநாட்டில் எங்களுக்கிடையே சொற்பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று பெண்கள் தரப்பிலிருந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது. எனவே லஜ்னாக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு பொதுவாக சிறிய ஜமாஅத்துகளில் நடத்தப்படுகின்ற மாநாட்டிலும் நான் நேரடியாக சொற்பொழிவு நிகழ்த்துகின்றேன். எனவேதான் இன்றும் உங்களிடம் நேரடியாக சொற்பொழிவாற்றுவதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.

நாம் திருக்குர்ஆனைப் பார்க்கும்போது, திருக்குர்ஆனில் ஆண்களுக்கு எந்த விஷயங்களை செய்வதற்காக கட்டளையிடப்பட்டுள்ளதோ அதில் பெண்களும் அடங்குவர். எனவே அடிப்படையான விஷயம் தொடர்பாக ஆண்களுக்கு நான் நிகழ்த்துகின்ற சொற்பொழிவே பெண்களுக்கு போதுமானதாக இருக்க வேண்டும். இந்த அறிவுரைகளின்படியும், இந்த விஷயங்களின்படியும் நடப்பதற்கு கவனம் இருக்க வேண்டும்.

(திருக்குர்ஆனில்) சில வழிகாட்டல்கள் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால், அதில் நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் அல்லாஹ் தனித்தனியாக சுட்டிக் காட்டியுள்ளான். ஆனால் விஷயம் ஒன்றுதான். திருக்குர்ஆனில் சில விஷயங்கள், பெண்களை மட்டும் பார்த்து கூறப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் அடிப்படையான விஷயத்தின் பக்கம் கவனம் இருக்குமென்றால் மேலும் அதன்படி செயல்பட்டால் பிறகு ஆண்கள் மற்றும் பெண்கள் தொடர்பாக கூறப்பட்டுள்ள கட்டளைகள் அனைத்தும் அதன் ஒரு பகுதியே ஆகும். அதன் விளக்கமே ஆகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: குத்பாக்களில், ஆண்களுக்கு நிகழ்த்தப்படுகின்ற சொற்பொழிவுகளிலும் நான் எடுத்துக் கூறுகின்ற அடிப்படையான விஷயங்களின்படி செயல்படவில்லை என்றால் பிறகு இப்போது லஜ்னாக்களுக்கென்று தனியாக நிகழ்த்தப்படுகின்ற இந்த சொற்பொழிவினால் எந்த பயனும் கிடையாது. ஆனால் இதுவும் உண்மைதான். அதாவது ஒருவரிடம் நேரடியாக பேசும்போது அதனால் அதிக தாக்கம் ஏற்படத்தான் செய்கிறது. எனவேதான் காலத்தின் கலீஃபாக்களின் நடைமுறையாக இது இருந்துள்ளது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சில சந்தர்ப்பங்களில் இன்னும் சொல்வதென்றால் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பெண்களுக்கு நிகழ்த்தப்படுகின்ற சொற்பொழிவில் சில விஷயங்கள் ஆண்களுக்கும் மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. நான் கூறியது போன்று பெண்களிடம் நேரடியாக நிகழ்த்தப்படுகின்ற சொற்பொழிவினால் நிச்சயமாக பயன் இருக்கத்தான் செய்கிறது.

பெரும்பான்மையான சமயங்களில் இந்த பயன் ஏற்படுகிறது. அதாவது ஆண்களுக்கு இவ்விஷயத்தினால் எந்த தாக்கமும் ஏற்படாமல் இருக்கின்றது. ஆனால் குறைந்தது பெண்களிடம் அது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் வீட்டில் ஒருவராவது இந்த விஷயங்களை செவியுற்று அதன்படி செயல்படக்கூடியவராக இருக்கின்றார்.

நமக்கு தெரிய வருவது என்னவென்றால், பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பெண்களிடம் அதன் தாக்கமும் ஏற்பட்டுள்ளது. எனவே பெண்களிடம் சொற்பொழிவு நிகழ்த்தப்படுவதால் நேரம்தான் வீணாகின்றது. அதனால் எந்த பயனும் கிடையாது என்று நம்மால் ஒருபோதும் கூற முடியாது. நான் கூறியதுபோன்று பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் நம்மால் இதனைப் பார்க்க முடிகிறது. அதாவது பெண்களிடம் நேரடியாக சொற்பொழிவு நிகழ்த்தப்படுகின்றபோது அதனால் அவர்களிடம் தாக்கம் மட்டும் ஏற்படுவதில்லை. மாறாக, அதனால் வியக்கத்தக்க நேர்மறையான மாற்றங்கள் ஏற்படுகின்றது.

நேரடியாக உரை நிகழ்த்தப்படுவதனால் ஏற்படும் இன்னொரு பயன் என்னவென்றால், பெண்களின் மடியில் புதிய சந்ததிகள் வளரக் கூடியவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு சிறந்த தர்பிய்யத் வழங்குவதில் தாய்மார்களின் மிகப்பெரிய பங்கு இருக்கின்றது. பெண்களிடம் நேரடியாக உரை நிகழ்த்தப்படுகின்றபோது அவர்களுக்கு அவர்களின் பொறுப்புகள் தொடர்பாக முன்பை விட அதிகமாக உணர்வு ஏற்படுகின்றது. எனவே அவர்களிடம் நேரடியாக சொற்பொழிவு நிகழ்த்தப்படுவது அவசியமாகும்.

ஆம்! சில சில தாய்மார்களும் இருக்கின்றனர். பெண்களும் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த விஷயங்களைப் பற்றி கவலையே கிடையாது. மேலும் இத்தகைய பெண்கள், அதே பழைய விஷயத்தைத்தான் மீண்டும் மீண்டும் கூறப்படுகின்றது என்று கூறுகின்றனர்.

*(தொடர்ச்சி 6 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad